**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ), பல்லடம்**
2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் நாள் வியாழக்கிழமை
(திருவள்ளுவராண்டு 2055, சோபகிருது வருடம், பங்குனி 01 ம் நாள்)

**இ.ம.எண்.3/2023**
**in**
**இ.ம.எண்.348/2019**
**in**
**அ.வ.எண்.84/2019**

1. T. தங்கராஜ் ... மனுதாரர்/எதிர்மனுதாரர்/7 ம் பிரதிவாதி

/எதிர்/

1. கந்தசாமி .... எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/எதிர்மனுதாரர்/7 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K. கோபாலகிருஷ்ணன் B.A.,B.L., , அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சக்திவேல் BSC.M.L. அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

கடந்த 25.07.2022 அன்று மனுதாரரை ஒருதலைபட்சமாக்கி பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நீக்கறவு செய்ய கோரி உரிமையியல் விசாரணை

நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151ன் படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்/7ம்பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–</u>**

i) இம்மனுவின் மனுதாரர் இ.ம. எண் 348/2019ல் 7ம் மனுதாரர் ஆவார். எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்துள்ளார். கடந்த 25.07.2022ம் தேதி அன்று மனுதாரர் ஆஜராவதற்கும் எதிர்உரை தாக்கல் செய்வதற்கு வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் மனுதாரர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டதால் மருத்துவரின் ஆலோசனையின்படி முழு ஓய்வில் இருந்ததாலும உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும் மனுதாரரால் தமது வழக்கறிஞரை தொடர்புகொள்ள இயலாததால் மனுதாரரின் வழக்கறிஞரால் எதிர்உரை தாக்கல் செய்ய இயலவில்லை எனவே இம்மனுவுடன் மனுதாரர் தனது எதிர்உரையை தாக்கல் செய்துள்ளார். இம்மனுவை அனுமதிக்காவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே 25.07.2022 இன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து மேற்கண்ட வழக்கில் ஆஜராக அனுமதி கோரி இம்மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்பதே மனுவின் சுருக்கமாகும்

**<u>2) எதிர்மனுதாரர் /வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் உரை சுருக்கம்:</u>**

i) மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானவை. சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. இம்மனுவில் இவ்வெதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபணம் செய்ய வேண்டும். கடந்த 25.07.2022ம் தேதி அன்று

மனுதாரர் ஆஜராவதற்கும் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் மனுதாரர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டதால் மருத்துவரின் ஆலோசனையின்படி முழு ஓய்வில் இருந்ததாலும உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும் மனுதாரரால் தமது வழக்கறிஞரை தொடர்புகொள்ள இயலாததால் மனுதாரரின் வழக்கறிஞரால் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்று மனுதாரர் தரப்பில் சொல்லியுள்ள காரணங்கள் பொய்யானவை. கடந்த 25.07.2022 அன்று மனுதாரர் பல்லடம் தாலூகா அலுவலருக்கு T.R. மனு எண் 1/2019 ல் ஆஜராகி மேற்படி வழக்கை நடத்தினார், அன்றைய தினம் உடல்நிலை சரியில்லாதது குறித்து சம்பந்தபட்ட எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை. எனவே மனுதாரரின் இம்மனு முதல் நிலையிலேயே செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

3) இரு தரப்பும் கேட்கப்பட்டது. இரு தரப்பிலும் சாட்சியங்கள் சான்றாவணங்கள் முன்னிடப்படவில்லை. வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

4) தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>5) தீர்வு:</u>

6) மனுதாரர் தரப்பில் கடந்த 25.07.2022 ம் தேதி அன்று மனுதாரர் ஆஜராவதற்கும் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் மனுதாரர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டதால் மருத்துவரின் ஆலோசனையின்படி முழு ஓய்வில் இருந்ததாலும் உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும் மனுதாரரால் தமது வழக்கறிஞரை தொடர்புகொள்ள இயலாததால் மனுதாரரின் வழக்கறிஞரால் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய

இயலவில்லை என்றும் இம்மனுவுடன் மனுதாரர் தனது எதிர்உரையை தாக்கல் செய்துள்ளார்.என்றும் இம்மனுவை அனுமதிக்காவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும் சொல்லப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 25.07.2022 அன்று மனுதாரர் பல்லடம் தாலுகா அலுவலருக்கு T.R. மனு எண் 1/2019 ல் ஆஜராகி மேற்படி வழக்கை நடத்தினார் என்றும் அன்றைய தினம் உடல்நிலை சரியில்லாதது குறித்து சம்பந்தபட்ட எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் சொல்லப்பட்டுள்ளது.

7) வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது இ.ம.எண்348/2019 எதிர்மனுதாரரால் இடைக்கால நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு கடந்த 25.07.2022 அன்று மனுதாரர் தரப்பு எதிர்உரைக்காக ஒத்திவைக்கப்பட்டு அன்றைய தினம் எதிர்உரை தாக்கல் செய்யாததால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இம்மனுவுடன் மனுதாரரால் எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) எதிர்மனுதாரர் தரப்பில் உடல் நிலை சரியில்லாதது குறித்து மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தாலும் அசல் வழக்கானது எதிர்மனுதாரரால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குவது நீதியின் பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் மேலே கண்ட விவாதங்களின்படியும் மனுதாரர் இம்மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட போவதில்லை என்பதாலும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே

நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது செலவுத் தொகை இல்லை.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2024.03.14 15:01:11 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ),**
**பல்லடம்.**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2024.03.14 15:01:19 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ),**
**பல்லடம்.**